E.mail. neethidevadhai@rediffmail.com

13-ம் ஆண்டு சிறப்புமலர்

# நீதிதேவதை

RNI No.TNTAM / 2012 / 52856

ஆசிரியர் & வெளியீட்டாளர்
C.சரவணன். M.A. B.L.,

www.neethidevadhai.com

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக 2-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கு.செல்வப்பெருந்தகை MLA அவர்கள் பணிசிறக்க வாழ்த்துகிறேன்



பா.சந்திரசேகர் BA
தலைவர் தமிழ்நாடு காங்கிரஸ் கலைப்பிரிவு
மத்திய சென்னை மேற்கு மாவட்டம்

13-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நீதிதேவதை மாத இதழுக்கு வாழ்த்துகள்



பா.சந்திரசேகர் BA
தலைவர் தமிழ்நாடு காங்கிரஸ் கலைப்பிரிவு
மத்திய சென்னை மேற்கு மாவட்டம்

# 2ஆம் ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக கு.செல்வப்பெருந்தகை



ரிசர்வ் வங்கி பணியாளராக இருந்த செல்வப்பெருந்தகை, சுமார் 25 ஆண்டுகால அரசியல் வாழ்க்கைக்கு சொந்தக்காரர். 2010ல் தான் அவர் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். 2011, 2016 தேர்தல்களில் முறையே செங்கம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதிகளில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய செல்வப்பெருந்தகை, 2021 தேர்தலில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தலித் சமூகத்திலிருந்து முதன்முதலாக தலைவராக நியமிக்கப்பட்டவர் கக்கன். பின்னர், அச்சமூகத்தைச் சேர்ந்த மரகதம் சந்திரசேகர், இளையபெருமாள் உள்ளிட்டோர் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். 1979ம் ஆண்டில் தலித் சமூகத்தைச் சேர்ந்த இளையபெருமாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்த நிலையில், அதன்பின் 40 ஆண்டுகளை கடந்து தற்போது தலித் தலைவராக செல்வப்பெருந்தகை நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## ப. சிதம்பரம் வாக்கு பலித்தது

2010ல் காங்கிரஸில் செல்வப்பெருந்தகை இணையும் நிகழ்ச்சியில் பேசிய அக்கட்சியின் மூத்தத் தலைவர் ப. சிதம்பரம், “செல்வப்பெருந்தகை தலைமையில் ஏராளமான தலித் தலைவர்கள் கட்சியில் இணைந்துள்ளனர். இதனால், மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு தலித் தலைமை கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது” என்று பேசினார். 14 ஆண்டுகள் கழித்து ப.சிதம்பரம் பேசியது நடந்திருக்கிறது.

தலைவராக தன்னை நியமித்திருப்பது குறித்து செல்வப்பெருந்தகை கூறியதாவது, “என் மீது நம்பிக்கை வைத்து மாநில தலைவர் பொறுப்பு கொடுத்திருக்கின்றனர். அதனை காப்பாற்றுவேன். கட்சியை பலப்படுத்துவேன். கட்சியில் அனுபவம்மிக்க தலைவர்கள் இருக்கின்றனர். அவர்களை ஒருங்கிணைத்து காங்கிரஸை மிகப் பெரிய கட்சியாக மாற்றுவேன் என்றார்.

## செல்வப்பெருந்தகையின் அரசியல் பயணம்

சென்னை அருகே மணிமங்கலத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த கு. செல்வப்பெருந்தகை தனது படிப்பை முடித்த பிறகு ஆரம்பத்தில் ரிசர்வ் வங்கியில் பணியாற்றிவந்தார். அந்தத் தருணத்தில் பூவை மூர்த்தியால் துவக்கப்பட்ட அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியில் (APLF) இணைந்து செயல்பட்டுவந்தார். அந்த அமைப்பு பிறகு புதிய பாரதம் கட்சியாக மாறியபோது அதில் தொடர்ந்தார்.

இதற்குப் பிறகு அங்கிருந்து வெளியேறி புதிய தமிழகம் கட்சியில் சில காலம் செயல்பட்டார். அந்தத் தருணத்தில் ஒரு விபத்தில் அவருக்குக் கால் முறிந்தபோது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவராக இருந்த தொல். திருமாவளவன் அவரைச் சென்று பார்த்தார். அதற்குப் பிறகு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் சேர்ந்தார் செல்வப்பெருந்தகை. கட்சியின் பொதுச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

2006ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது. மங்களூர் தொகுதியில் போட்டியிட்ட அவர் வெற்றிபெற்றார். ஆனால் இதற்குப் பிறகு கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் வி.சி.கவிலிருந்து விலகினார். அதன் பிறகு 2008ஆம் ஆண்டு பகுஜன் சமாஜ் கட்சியில் சேர்ந்த செல்வப்பெருந்தகை, அக்கட்சியின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்டார்.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக 21-2-2024 அன்று கு.செல்வப்பெருந்தகை பதவியேற்றப்போது எடுத்தப்படம்

2010ஆம் ஆண்டில் பகுஜன் சமாஜ் கட்சியிலிருந்து விலகிய செல்வப்பெருந்தகை, ராகுல் காந்தி முன்னிலையில் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அவருக்கு பட்டியலினப் பிரிவின் மாநிலத் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டது.

2011ஆம் ஆண்டின் காங்கிரஸ் கட்சியின் சார்பில் செங்கம் தொகுதியிலும், 2016ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலும் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் மீண்டும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிட்ட செல்வப்பெருந்தகை தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் பழனியைவிட சுமார் பத்தாயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றார்.

தமிழக காங்கிரஸ் கட்சிக்குள் கு. செல்வப்பெருந்தகையின் வளர்ச்சி மிக வேகமாக இருந்ததாகவே சொல்லவேண்டும்.

2021இல் கு. செல்வப்பெருந்தகை காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏவான தருணத்தில் அவருக்கு சட்டமன்றக் கட்சிக்குள் சீனியராக விஜயதரணி, ராஜேஷ் குமார் போன்றவர்கள் இருந்தார்கள். இருந்தபோதும் சட்டமன்றக் கட்சித் தலைவர் வாய்ப்பு செல்வப்பெருந்தகைக்குக் கிடைத்தது. தமிழக சட்டசபையின் பொதுக் கணக்கு குழு தலைவராகவும் கு. செல்வப்பெருந்தகை நியமிக்கப்பட்டார்.

இப்போது தமிழக காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார் செல்வப்பெருந்தகை. இளையபெருமாள், மரகதம் சந்திரசேகரைத் தொடர்ந்து தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராகும் பட்டியலினத்தைச் சேர்ந்த மூன்றாவது தலைவர் இவர்.

## பதவி ஏற்பு

2024 பிப்ரவரி 17ஆம் தேதியன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக செல்வப் பெருந்தகை நியமிக்கப்பட்டாலும், 21ஆம் தேதி புதன்கிழமை அன்று தான் பதவியேற்றுக்கொண்டார். இந்த பதவியேற்பு விழா காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைமையகமான சத்தியமூர்த்தி பவனில் மிக பிரம்மாண்டமாக நடந்தது.

திருமலைப்பிள்ளை சாலையில் உள்ள காமராஜரின் வீட்டை பின்னணியாக வைத்து பிரம்மாண்டமான மேடை அமைக்கப்பட்டிருந்தது. கட்சிக்குள் மோதல் ஏதும் இல்லை என்பதைக் காட்டும்விதமாக முன்னாள் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதில் கிருஷ்ணசாமி, கே.வி. தங்கபாலு, திருநாவுக்கரசர், செல்வப் பெருந்தகைக்கு முன்பு தலைவராக இருந்த கே.எஸ். அழகிரியும் கலந்துகொண்டனர்.

-ஞானமணி
தலைமை நிருபர்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக 2-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கு.செல்வப்பெருந்தகை MLA அவர்கள் பணிசிறக்க வாழ்த்துகிறேன்



பா.அழகிரி M.A. MPhil.,
மூத்த துணைத்தலைவர் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி

## கோவில்பட்டியில்

# தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்க முப்பெரும் விழா

## மாநிலத் தலைவர் டிஎஸ்ஆர் சுபாஷ் தலைமையில் நடந்தது

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் கோவில்பட்டி மாவட்ட மாநாடு கோவில்பட்டி எட்டயபுரம் சாலையில் உள்ள சிதம்பர நாடார் காமாட்சி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவரும், அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான டி.எஸ்.ஆர் சுபாஷ் தலைமை வகித்தார். தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் நலச் சங்கத்தின் நிறுவனர் டாக்டர். கிருஷ்ணா இராதாகிருஷ்ணன்,நீதி தேவதை செய்தி குழுமம் ஆசிரியர் சரவணன், தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் தூத்துக்குடி மாநகர் மாவட்ட தலைவர் முருகன், தூத்துக்குடி புறநகர் மாவட்ட தலைவர் இருதய ஞான ரமேஷ், தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளர் கோடீஸ்வரன், சமூக நீதிப் பேரவை பொதுச் செயலாளரும், அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் தேசியக்குழு உறுப்பினர் அஹமது சாகிபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவர் வெங்கடேஷ் சங்கத்தின் கொடியை ஏற்றி வைத்தார். மருத்துவர்கள் பூவேஸ்வரி வரதராஜன், லதா வெங்கடேஷ், ராஜேஸ்வரி பிரபு, நகர் மன்ற உறுப்பினர்கள் ஏஞ்சலா சின்னத்துரை, மணிமாலா, ஜாஸ்மின் லூர்து மேரி, உலக ராணி, கோவில்பட்டி பிரைடு சிக்கன் நிர்வாகி ராமலட்சுமி, பிச்சைமாரியம்மாள், சரவணசெல்வி ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றிவைத்தனர்.

இதையடுத்து மறைந்த செய்தியாளர்கள் புகைப்படங்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து முன்னாள் அமைச்சரும் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் ராஜூ , கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் திமுக நகர செயலாளர் கருணாநிதி, நகர் மன்ற துணைத்தலைவர், மதிமுக மாவட்ட செயலாளர் ரமேஷ், கழுகுமலை பேரூராட்சி தலைவர் அருணா சுப்பிரமணியன், திருநெல்வேலி மாநகராட்சி துணை ஆணையர் ராஜாராம், கோவில்பட்டி டி.எஸ்.பி.ஜெகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து முன்னாள் அமைச்சரும் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் ராஜூ , கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கருணாநிதி,தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவரும், அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான டி.எஸ்.ஆர் சுபாஷ் ஆகியோர் கோவில்பட்டி மூத்த









பத்திரிகையாளர்கள், கோவில்பட்டி, விளாத்திகுளம், கழுகுமலை, கயத்தார், எட்டயபுரம் பகுதி செய்தியாளர்களுக்கு விருது வழங்கினார். மேலும் பல்வேறு துறைகளில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கு விருது வழங்கப்பட்டது. இதையடுத்து 5வது தூண் அமைப்பின் தலைவர் சங்கரலிங்கத்திற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து மறைந்த பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது.





இதில் கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தலைமை மருத்துவர் பாலகிருஷ்ணன், ரோட்டரி சங்க மாவட்ட தலைவர் (விருது குழு) விநாயகா ரமேஷ், கருத்தூரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு தலைவர் தமிழரசன், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் வடக்கு மாவட்ட தலைவர் ராஜகோபால், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தூத்துக்குடி மண்டல தலைவர் ராதாகிருஷ்ணன், தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் முனைவர் சம்பத்குமார், நேஷனல் சிறுதீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் பரமசிவம்,பாட்டாளி மக்கள் கட்சியின் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் ராமச்சந்திரன், பாஜக தூத்துக்குடி வடக்கு மாவட்ட தலைவர் சரவண கிருஷ்ணன், பொதுச்செயலாளர் வேல்ராஜ், அமமுக நகர செயலாளர் செல்வம், தேமுதிக தூத்துக்குடி வடக்கு மாவட்ட தலைவர் சுரேஷ், காங்கிரஸ் கட்சி தூத்துக்குடி வடக்கு மாவட்ட துணைத் தலைவர் அய்யலுச்சாமி,இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செந்தில் ஆறுமுகம், இ.வாகன சேவை கணேஷ்குமார், ஓடைப்பட்டி வன்னி விநாயகர் திருக்கோவில் அறங்காவலர் வெங்கடேஷ்வரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



இதில் கயத்தார் வட்டாட்சியர் சுந்தர் ராகவன்,வணிக வைசிய சங்க தலைவர் வெங்கடேஷ், மாடார்ன் ஹார்டுவேர் உரிமையாளர் ரமேஷ் குமார், அறங்காவலர் குழு உறுப்பினர் திருப்பதி ராஜா, தென்னிந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகி சேதுரத்தினம், நகர்மன்ற உறுப்பினர் கவியரசன், பாஜக நகர தலைவர் காளிதாசன், தேமுதிக நகர செயலாளர் நேதாஜி பாலமுருகன், தமிழ்ப் பேரரசு கட்சியின் வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் வழக்கறிஞர் சரவணன், தூத்துக்குடி ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர் வேல்முருகன், ராசி சிஸ்டம்ஸ் உரிமையாளர் அசோக், கோவில்பட்டி பிரைடு சிக்கன் நிர்வாகி ரவி, கோவில்பட்டி கடலை மிட்டாய் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் சங்கத்தின் தலைவர் கார்த்திக், செயலாளர் கண்ணன், சமூக ஆர்வலர்கள் ராஜேஷ் கண்ணா, குருசாமி , பரமசிவம், சுதாகர், முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பாரதியார் அறக்கட்டளை முத்து முருகன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

**-கோமதிநாயகம்**

# 21.2.2024 அன்று காமராஜர் இல்லத்தில் பதவியேற்றார் செல்வப்பெருந்தகை!




22.2.2025 அன்று
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக 2வது ஆண்டில்
எங்கள் அண்ணன்
கு.செல்வப் பெருந்தகை
MLA அவர்களின்
பணி சிறக்க வாழ்த்துகிறேன்.
Dr. PV இமயா கக்கன்
ஊடகத்துறை பேச்சாளர்,
மாநில துணைத்தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி


பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!
அன்பு தம்பி
லயோலா மணி அவர்களை
தமிழக வெற்றிக் கழகத்தின்
கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக நியமனம் செய்த
கழக தலைவர்
தளபதி
அவர்களுக்கும்
பரிந்துரை செய்த
கழகப் பொதுச்செயலாளர்
புஸ்ஸி.N.ஆனந்த் Ex.,MLA.,
அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
அன்புடன்...
விக்னேஷ்குமார்
தென்சென்னை மாவட்ட துணைத் தலைவர்
தமிழ்நாடு யூனியன் ஆப் ஜெர்னலிஸ்ட்ஸ்


பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் !
நன்றி! நன்றி!! நன்றி!!!
தமிழக வெற்றிக் கழகத்தின்
கழகக் கொள்கைப் பரப்பு இணைச்செயலாளராக
என்னை நியமனம் செய்த
தமிழக வெற்றிக் கழகத் தலைவர்
தளபதி
அவர்களுக்கும்
பரிந்துரை செய்த கழகப் பொதுச் செயலாளர்
திரு. N.ஆனந்த் Ex.MLA.,
அவர்களுக்கும்
அன்பு கலந்த நெஞ்சார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்...
நன்றி! நன்றி!! நன்றி!!!
அன்புடன்...
லயோலா மணி
கழகக் கொள்கைப் பரப்பு இணைச்செயலாளர்
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்



காங்கிரஸ் தலைவர்களுடன் புதிய நிர்வாகிகள் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

## தமிழ் நாட்டிலேயே

# காங்கிரஸ் கிராம கமிட்டி மறு சீரமைப்பு பணியில் வட சென்னை மேற்கு மாவட்டம் முதலிடம்!

## மாவட்டத் தலைவர் டில்லிபாபு-க்கு செல்வப்பெருந்தகை பாராட்டு

தமிழ்நாடு காங்கிரஸ் கிராம கமிட்டி மறுசீரமைப்பு திட்டத்தின்கீழ், வடசென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் மாவட்டத்துக்கு உட்பட்ட கொளத்தூர், திருவிக நகர், பெரம்பூர் ஆகிய தொகுதிகளில் உள்ள 20 வார்டுகளில் 35 வட்ட கமிட்டி, 9 சர்க்கிள் கமிட்டி என ஒவ்வொரு கமிட்டிக்கும் 31 நிர்வாகிகள் வீதம் மொத்தம் 1,364 நிர்வாகிகளுக்கு முறையே தலைவர், துணைத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், செயலாளர், செயற்குழு உறுப்பினர் உள்பட பல்வேறு பிரிவு நிர்வாகிகள் பரிந்துரைக்கப்பட்டு, முறையான கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

அதன் படி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைமையகத்தில் வழங்கப்பட்ட படிவங்களை, வடசென்னை மேற்கு மாவட்டத்தில் 100 சதவிகித நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. பின்னர் பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்பங்கள், தமிழ்நாட்டி லேயே முதல் மாவட்டமாக சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடந்த விழாவில் காங்கிரஸ் மேலாண்மை ஒருங்கிணைப்பு குழு தலைவர் பீட்டர் அல்போன்ஸ் முன்னிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை யிடம் வடசென்னை மேற்கு மாவட்ட தலைவர் டில்லிபாபு ஒப்படைத்தார்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஜி.கே. தாஸ், மண்டல ஒருங்கிணைப்பாளர் விஜயன், ஜோதி, பாராளுமன்ற அமைப்பாளர் தாமோதரன், சட்டமன்ற அமைப்பாளர்கள் வில்லிவாக்கம் சுரேஷ், சுகன்யா, கிஷோர் குமார், உமாபதி, காளிஷா, ஏ.ஆனந்த், கொடுங்கையூர் செல்வம், சர்க்கிள் கமிட்டி தலைவர்கள் பீர்முகமது, ரஜினி செல்வம், கணபதி, முரளி, ஹரிபாபு, ஆனந்தராமன், பாபுகான், சுந்தர், பாஸ்கர், வட்டத் தலைவர்கள், மாவட்ட நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக தமிழகத்திலே முதன்முறையாக கிராம கமிட்டிகளை மறு சீரமைப்பு செய்த வடசென்னை மேற்கு மாவட்ட தலைவர் டில்லி பாபு வுக்கும், புதிய நிர்வாகிகளுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

**செய்தி: ஞானமணி**



நிர்வாகிகள் பட்டியலை மாநிலத் தலைவரிடம் ஒப்படைத்த காட்சி



வடசென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டில்லி பாபுவை பாராட்டி சால்வை அணிவிக்கிறார் மாநில தலைவர் செல்வப் பெருந்தகை.

# 13- வது ஆண்டில் நீதிதேவதை - வாழ்த்துகிறோம்






### தூத்துக்குடி வடக்கு மாவட்டம் சார்பில்


# தேமுதிக கொடிநாள் கொண்டாட்டம்

## மாவட்ட செயலாளர் சுரேஷ் உணவு வழங்கினார்

தூத்துக்குடி வடக்கு மாவட்டம் தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் கோவில்பட்டி காந்தி மைதானத்தில் தேமுதிக கொடி நாள் 25 ஆம் ஆண்டு வெள்ளிவிழாவை முன்னிட்டு மாவட்ட அவைத்தலைவர் கொம்பையா பாண்டியன், நகரச்செயலாளர் நேதாஜி பாலமுருகன் தலைமையில், செயற்குழு உறுப்பினர் பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர் காளிதாஸ் முன்னிலையில், வடக்கு மாவட்ட செயலாளர் சுரேஷ் கட்சி கொடி ஏற்றி வைத்தார். பின்னர் அனைவரும் உறுதிமொழி ஏற்றுகொண்டனர். தொடர்ந்து பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். இதில் மேற்கு ஒன்றிய செயலாளர் பெருமாள்சாமி, மாவட்ட தொழில்சங்க செயலாளர் சுப்புராஜ், முருகன், மாவட்ட இளைஞரணி துணைசெயலாளர் லட்சுமணன், நகர நிர்வாகிகள் மதிமுத்து, பிரசன்னா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

-கோமதிநாயகம்



13 வது ஆண்டில்

## நீதிதேவதை

பல சாதனைகள் படைக்க வாழ்த்துகிறோம்



ஆசிரியர் / வெளியீட்டாளர்

திரு.**ச.சரவணன்** M.A. B.L., அவர்களுக்கு

வாழ்த்தும், பாராட்டும்.


M.மீனாட்சிசுந்தரம்.M.A.B. Lit.,
இணை ஆசிரியர்


S.நரேஷ்குமார்.D.H.M.C.T.,
துணை ஆசிரியர்


A.ஜெயந்த்
உதவி ஆசிரியர்


S.அரவிந்த்.BBA.LLB.,
செய்தி ஆசிரியர்


J.சண்முகம்
புகைப்படக் கலைஞர்


S.பிரதீப்
கோயம்புத்தூர்


P.மாரிமுத்து
திருநெல்வேலி


D.சுந்தரராஜன்
திருவண்ணாமலை


D.ராஜேஷ்
திருச்செந்தூர்


C.கோமதிநாயகம்
தூத்துக்குடி


P.முருகானந்தம்
திருவள்ளூர்


M.முருகேசன்
சென்னை


S.கமலக்கண்ணன்
செங்கல்பட்டு


S.மோனிகா
திருகழுங்குன்றம்,
தாலுகா

ஆசிரியர் குழுவினர், நிருபர்கள் மற்றும் ஊழியர்கள்

## நீதிதேவதை




Owner Publisher & Editor C.SARAVANAN No : 6/21,Namasivaya Street,Old Washermen pet,Chennai-600021 Printed by E.Sudeeshkumar at Chennai Offset Printers, No.19/1, 21/2, Kitabath khan Bhadur Street, Ellies Road, Chennai-600002. Mail.id. neethidevadhai@rediffmail.com. Phone No.9884956002